கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடக்கு மாகாண சபை
සමුපකාර සංවර්ධන දෙපාතර්මේන්තුව, උතුරු පළාත්සභාව
**Department of Co-operative Development,**
**Northern Provincial Council**
முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
වැඩිහිටියන් නිවාස සංකීර්ණය, නුවර පාර, කයිතඩි, යාපනය.
Elders' Home Complex, Kandy Road, Kaithady, Jaffna.

My No:- NP/15/04/02/CCD/CI Date:-2023.04.27

சுற்றறிக்கை – **02/2023 (i)**

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும்,

## பொது, மாகாண சபை, மாநகர சபை, நகரசபை, பிரதேச சபைத்தேர்தல்கள்

எனது சம இலக்க 02/2023 சுற்றுநிருபத்தின் 03.4.ஆ பிரிவின் பின்னர் பின்வரும் பிரிவு சேர்க்கப்பட்டு இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

**04. தேர்தலொன்றில் அல்லது வாக்கெடுப்பு ஒன்றில் போட்டியிடுவதற்காக விடுமுறை பெற்றிருக்கும் அரசியல் உரிமைகளைக்கொண்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், இயக்குனர் சபை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அந்த தேர்தல்/வாக்கெடுப்பு பிற்போடப்படும் அல்லது இரத்துச்செய்யப்படும் சந்தர்ப்பத்திலான நடைமுறைகள்.**

தேர்தலொன்று/வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுவதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டு வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் நீதிமன்ற ஆணையொன்றின் பிரகாரம் அல்லது அவசர நிலையொன்றின் காரணமாக தேர்தல்/வாக்கெடுப்பு பிற்போடப்படும் சந்தர்ப்பத்தில்,

04.1 வேட்புமனு பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 03 மாத காலம் முடிவடையும் திகதியாகும் போது தேர்தல்/வாக்கெடுப்பு நடாத்தப்படும் புதிய திகதியொன்று பிரகடனப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில், அதற்கு அடுத்த நாளிலிருந்து தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்தலுக்கான/வாக்கெடுப்புக்கான புதிய திகதி வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் வெளியிடப்படும் வரையில், வேட்பாளர்கள் என்ற வகையில் கூட்டுறவுச் சங்க நடவடிக்கையிலிருந்து தற்காலிகமாக விலகியுள்ள கௌரவ இயக்குனர்கள் மற்றும் சம்பளமற்ற/சம்பளத்துடனான விடுமுறை பெற்றிருக்கும் பணியாளர்கள் தமது சேவைக்கு சமுகமளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். மேலும் இந்தக் காலப்பகுதியில் கூட்டுறவுச் சங்க இயக்குனர்கள் தங்களது கௌரவ சேவையை அல்லது கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தங்களது ஊழியத்தினைப் பயன்படுத்தி அரசியல் கட்சிகளின் அலுவலகங்களில் அல்லது கூட்டுறவு நிறுவனங்களின் சுற்றுச்சூழலில் அல்லது அரசியல் பிரச்சாரச் செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார் என அந்த இயக்குனரிடமிருந்து/பணியாளரிடமிருந்து சத்தியக்கடதாசி ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

04.2 தேர்தலொன்று / வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்பட்டு விசேட காரணங்களின் அடிப்படையில் அந்தத் தேர்தல்/வாக்கெடுப்பு இரத்துச்செய்யப்படும் சந்தர்ப்பத்தில்,

ஆணையாளர் / කොමසාරිස් / Commissioner – 021 205 7063
உதவி ஆணையாளர் / සහකාර කොමසාරිස් / Asst. Commissioner – 021 227 1418
கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant – 021 223 2212
பொது / පොදු / Gen – 021 205 7064
தொலைநகல் / ෆැක්ස් / Fax – 021 205 7062
E- Mail: - ccdnp@mail.com
Web: - np.gov.lk

அவ்வாறு இரத்துச் செய்வதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மீண்டும் தேர்தல்/வாக்கெடுப்பு நடாத்தப்படும் திகதி வரையான காலம் *03* மாதங்களுக்கு மேற்பட்டதாக இருப்பின், தேர்தலுக்காக/வாக்கெடுப்புக்காக விடுமுறை பெற்றிருக்கும் கூட்டுறவுச் சங்க இயக்குனர்கள்/பணியாளர்கள், அந்த *03* மாதங்களை விஞ்சும் திகதியிலிருந்து தேர்தல்/வாக்கெடுப்பு மீண்டும் அறிவிக்கப்படும் திகதி வரையான காலத்தினுள் சேவைக்குச் சமுகமளிப்பதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

தேவந்தினி பாபு
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாண சபை.

தேவந்தினி பாபு
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

*பிரதிகள் –*

1. செயலாளர், மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு, - தயவுடன் தகவலுக்காக
2. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், …………………… - நடைமுறைப்படுத்துவதற்காக.
3. பணிப்பாளர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், வவுனியா – தகவலுக்காக